உ

குமரன்றுணை.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.



மதுரை-புக்ஷாப்

பி. நா.

சிதம்பர முதலியார்

பிரதர்ஸ் அவர்களால்

திருமங்கலம்

ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

உ

குமரன்றுணை.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.



மதுரை-புக்ஷாப்

பி. நா.

சிதம்பர முதலியார்

பிரதர்ஸ் அவர்களால்

திருமங்கலம்

ஸ்ரீ கிருஷ்ண விலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

உ

முருகன் றுணை.



கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.

காப்பு

குருவிருத்தம்.

வெத்திமாமயில் வேலவர்மீதினிற்
சத்தியானந்தச் சிந்துபுகன்றிட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுக னைங்கரன்காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தானா னாதந்த னானா.

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்—வள்ளி
தெய்வானை மணவாளன் மீதிலென்னாளும்

பார்புகழ வேதுதி சிறக்க—எங்கள்
பாரமத யானைமுகன் றன்னருள்பெருக்க

தானந்த நடனமயி லேறுஞ்—சுவாமி
சரஹண பவானந்தன் மீதிலருள்சேரும்
ஆனந்தக் களிப்பதனைப் பாட—கைலை
யாளிமல ரடியைநா னனுதினந்தேட
சதுர்முகன் தேவிநயந் தரவே—இந்தத்
தாரணியி லுகந்தகவி வாணர்ஜெயம் பெறவே
கதிர்காம மானகர் சிறப்பாம்—எங்கள்
கண்ணரரு ளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம்
திசைமெய்த்த புகழ்கொண்டு நாளும்—நல்ல
செல்வமி யாபார தர்மமதுவாழும்
வசியகுல நகரத்தார் தானே—வந்து
வணங்குமெங்கள் கதிரேசன் சன்னதியில்நானே
சொன்னகவி தன்னையரங் கேற்ற—வதனில்
சொற்பிழைகள் வாராம லென்னையுமேகாத்த
நன்னய மிகுந்த தெய்வானை—யம்மன்
நற்கமல ரடியிணையை நான்றுதிப்பேனே
அருமறைகள் புகழ்துதிகள் பூணும்—வள்ளி
யம்மையென் கவிதனக் கருள்தரவும்வேணும்
குருமுனியைப் பணிந்துகவி கூற—அதற்கு
குறைகளென்றும் வாராமல் சபையிலறங்கேற்ற
சீதையால் ராமனு முன்னாலே—வந்து
தெர்ப்ப சயனஞ்செய்ய திருப்புல்லாணியிலே
நாதனருள் கங்கைகுல சீலன்—தங்கம்
ராம சாமிசொன்ன கவிக்கு கந்தவேலன்
எச்சரிக்கை யென்றிடும்பன் கூற—வந்து
இருபுறமுங் காவடிகள் நின்றுவிளையாட
பச்சை மயிலேறியருள் சீலன்—நித்தியம்
பக்ஷம்வைத் தென்கலி யகற்றும்வடிவேலன்
தென்கதிர் மானகர் விளங்க—வந்த
தேவாதி தேவர்ஜெயங் கூறியேமுழங்க
அன்பான சன்னதி யிலங்க—கதிரை
ஆறுமுக வேலருட மாபதிதுலங்க

முன்னாலே கோபுர முகப்பும்—எங்கள்
முருகேசன் கோவில்முழுச் செம்பால்வகுப்பும்
அன்னமெனும் தெய்வானை மாடம்-வள்ளியம்மை
யவள்பந் தடித்துவிளை யாடிடுங்கூடம்
மூதண்ட யோகபதி யேறும்-கதிரை
முத்துலிங்க சுவாமியுட சன்னதியைப்பாரும்
நாதமொடு கீதமு முழங்க-வசிய
நகரத்தார் கட்டிவைத்த சத்திரம்விளங்க
காணிக்கை கொண்டுவெகு கோடி-ஜனங்கள்
கதிரேசன் சன்னதிக்கி வருவார்கள்தேடி
மாணிக்க கெங்கை நீராட-இங்கே
மாதவரும் மனிதர்களும் வந்துநிதங்கூட
பொன்னலங் கார நகர் வாசம்-எங்கும்
புகழ்பெற்ற நவரத்ன மேவிளையுந்தேசம்
சொர்ணமிகு கதிரைவள மெத்த-தோழி
சொல்லுகிறேன் நாட்டுவளம் வானுலகுதித்த
இந்திரனுட யேவலதி னாலே-வந்த
எழுமேகமு மொன்று கூடியேமேலே
சந்திரனென வாகவுமே வோங்கி-சத்த
சாகர மதில்தாவி தண்ணீரை வாங்கி
மாலென விசும்பிடை படர்ந்து-முகில்கள்
மண்டியே கெற்ஜித்து மின்னலுமடர்ந்து
நாலுதிசை நாடியே தெளிந்து-கதிரை
நகர்பூமி யெங்குமழை மாரிகள் பொழிந்து
எரிகுளம் வாவிகள் நிறைந்து-வயல்கள்
எங்கெங்கு மேகன்னல் சென்னலும்வளர்ந்து
வீரிய மிகுந்தமு தத்தின்-நல்ல
வெண்கமுகு சோலைமலை மேலெங்குந்தோண
கனியே பழுத்துதிரு வாவும்-அதனில
தாவியொரு கொம்போடே கொக்குகளுமேவும்
இனியமலர் வாசனைகள் தேடும்-விறென
நிருபத்து நாலுகால் வண்டினங்கூடும்

நாகமது நாகமதி லேறும்-துய்ய
    நாகமே புனைந்தசில மாதரையும்பாரும்
நாகமலர் சோகுமலர் முல்லை-இந்த
    நாட்டினிலே மலைபகடுக் கொருகொம்புமில்லை
முல்லையிரு வாட்சிக ளெடுத்து-அந்த
    முல்லையிலே யிதளில்லா மடவார்தொடுத்து
வல்லவினை தீரவெனத் தேடி-பாது
    வள்ளி தெய்வானைக் கிடுவார்கள்கோடி
சதுர்மறையும் புகழ்தேவ ரிங்கே-வந்து
    தான்வாசஞ் செய்கதிரை மாணிக்ககெங்கை
இதிலே நீராடுவது சித்தி-ஜென்மம்
    ஈடேறுஞ் சாயுச்சிய பதவியிலேமுத்தி
கோலமா மலையழகைப் பாரும்-கதிரை
    குமரேச னருளாலே வல்வினைகள் தீரும்
மூலகண பதிக்கிளைய வாகன்-கதிரை
    முத்துலிங் கோருக்கருள் செய்தயோகன்
மாமேவும் புலிபுகழுந் தேட்டான்-கதிரை
    மகிமை களைச்சேடனு ளவிடமாட்டான்
பூமேவுங் குழல்வள்ளி நேயன்-சுவாமி
    புண்ணியன் தேவருக்கும் மனிதருக்கும் நாயன்
பச்சை மால்தனக்கு மருகோனே-சுவாமி
    பழனிமலை மீதினிலே மேவுமுருகோனே
வச்சிரா யுதன்தம்பி மருகா-உந்தன்
    மலரடி யெனக்குநிதந் தரவேணுமுருகா
நவவீரர் துணையான குகனே-நம்பி
    நாராயணன் றங்கை யபிராமிமகனே
நவமணி யணிந்த வொளிமூவர்-நின்று
    நடனமிடு மயிலேறி யெனைவந்துகாவா
கனககுண் டலமிட்ட நீதா-சுவாமி
    கார்த்தி கேயாலட்சம் படைவீரர்தானே
தனமேரு பாக்கியமருள் வேலா-எங்கும்
    சர்வபரி பூரணானந்த சிவபாலா

ஓராறு மங்கையர்கள் சேயன்-பவனி
ஒய்யார மாகமயில் மீதுலவுதூயன்
ஈராறு பன்னிருகை யாண்டி-புவன
மெங்கெங்கு மேலுநி மிகுந்தமெய்யாண்டி
ஆண்டி பொன்னாண்டி சிவனாண்டி-பழனி
யாண்டிமலை யாண்டிசிலை யாண்டியிவனாண்டி
ஆண்டிமக னாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகான சாமிமலை திருப்பரங்குன்றாண்டி
சிக்கல் புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூ ரெட்டிகுடி குன்றைக்குடியாண்டி
மிக்கதிரு வேரகத் தாண்டி-கதிரை
மேவிவளர் வேல்முருக னறுமுகத்தாண்டி
சோலைமலை கழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலை விராலிமலை சென்னிமலையாண்டி
வாலையருள் பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க் கேயெந்த நாளுமனுகூலா
விடவரவு படமும்விசை கெடவும்-படியே
வடவரைகள் கிடுகிடென கெஜமுமறைபடவும்
கடல்சுவா கதிர்மதி கலங்க-தாவி
கனவேக மாகவரு மயில்மீதிலங்க
மேலாகி விளையாடு மெய்யா-வெற்றி
காலாயு தத்தையு மெடுத்தமுருகையா
சாலோக சாமீப மென்னும்-சுவாமி
சாரூப சாயுச்சிய பதவியிலேமுன்னும்
ஆகவே நின்றபர நாதா-என்னை
ஆதரித் தாளவா வேணுங்குருநாதா
தாகமா யிருக்குதுனைக் காண-வந்த
சுவாமிவரு வாயெனது கண்ணெதிரேதோண
அரகரா வேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுக மாய்வந்த வடிவேநமாவோம்
அரகரா முருகா நமாவோம்-வாலை
அம்பிகை பராசத்தி மைந்தாநமாவோம்

அரகரா குகனே நமாவோம்-சுவாமி
அன்பருக் கன்பான பொருளே நமாவோம்
அரகரா தேவா நமாவோம்-சுவாமி
அகிலபுவ னத்திலும் நிறைந்தாய்நமாவோம்
மயிலேறு மொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுந் தமிழ்முனிவன் குருவே நமாவோம்
மயிலேறும் கந்தா நமாவோம்-வட்ட
டெவாலில் மேவுமால் மருகா நமாவோம்
மயிலேறும் நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும் பரமனுட குருவே நமாவோம்
மயிலேறு கின்றாய் நமாவோம்-தங்க
வடிவான வேலது வுகந்தாய்நமாவோம்
திரிபுர பவாவா நமாவோம்-வள்ளி
பாகனே பவனொழி பவாவா நமாவோம்
சரஹண பவாவா நமாவோம்-கந்த
சுவாமியே சயலொழி பவாவா நமாவோம்
தரும துரையே நீரு மென்னை-நல்ல
தருணமிது காணிந்த வேளையிலேயென்னை
காவுவுன் னீரடிகள் தன்னை-நான்
கண்டெனது கலிதீர வந்துமென் முன்னை
வாவென்று சொல்ல மனமில்லையோ-உமக்கு
வள்ளிதெய் வானைவிடை தந்தனுப்பவில்லையோ
தஞ்ச மென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங் கலியைத் தீப்பாயெனக்கு
அஞ்சறிவு மானதா யகனே-சுவாமி
அகிலாண்ட கோடி பிர்ம்மாண்ட நாயகனே
உன்கிருபை தந்துமே கண்பாரும்-இந்த
உலகமுழு தாள்பவனே யென்கலியைத்தீரும்
அன்புபெரும் வானரராஜன் பேரா-சுவாமி
அடியனுன் னடியிணையைக் காண நீராரா
வாவா யென்றேவா நீ யென்றே-சுவாமி
வடிவேலா வாவெனத் தொழுதுநின்றே

எவன் றேடினாலுந் தேடட்டும்-நமக்
கென்சொல்லிக் கவிபாடினாலும் பாடட்டும்
நமக் கென்னவென் றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோ நானுமுறை யிட்டதறியீரோ
உனக்குமன மிரங்காத தேது-எங்கள்
உத்தமி சுந்தரியின் பாலாயிப்போது
ஐயா நீ கிருபை செய்ததாலே-இந்த
அகிலாண்ட கோடிபூ மண்டலத்தின்மேலே
மெய்யான சரிதையி லனேகர்-அதற்கு
மேலான கிருபையி லிருப்பவரனேகர்
தவயோகக் காராவெகு வெள்ளம்-அங்கு
தங்கியே யிருப்பவர்க ளோமகாவெள்ளம்
அவர்களைப்போல் நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாக வெனக்குவிதி அயனெழுதவிலையோ
அன்னையவ ளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலே முன்னவர்கள் செய்துவந்தசதியோ
என்னகுறை யிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கு ஆளாக என்னையுமேசேர்த்து
ஆளாக்கி யாளலா காதோ-எந்தன்
அகந்தனிலே நீயிருந்து வாழலாகாதோ
பாழான மனங்குவியு திலையே-என்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே
வஞ்சகமில் லாமலே கண்பாரும்-முடிவில்
மறலியுட னாதவெனை வருத்தாமல்காரும்
அஞ்சுதலை யாருளுந் துரையே-உமக்கு
அஞ்சுதலை யய்வேத னிருந்ததுவுஞ்சரியே
ஆறுதனைக் கண்டண்ட ரய்யா-பின்பு
ஆறுதலை யாய்ப்பதியை யாண்டவரேமெய்யா
ஆறுபடை வீட்டுக் கதிகாரா-வந்த
அசுரருட னஞ்சாத போர்புரியும்வீரா
சத்தி யுமை பாலகனே-உந்தன்
தாசனுக்கு தாசனெனைக் காப்பதற்கேமி

கத்தபரி பூரா ணு வுன்னை-ஓதி
துதிக்குமடி யார்க்குமடி யாகவருளென்னை
பொய்யாத வாழ்வருளாய் வேலா-கந்த
ஐயாவே யென்னையாளுந் தேவாதிதேவா
ஒய்யார மானமுருகோனே-வந்த
உற்பவ மெனுந்துதியை செப்புவேனுனே
உரமான வசுரரிட ராலே-தேவர்
ஓடிமுறை யிட்டாரே கைலைமலையேலே
அரனசுரர் மேல்கோப மாகி-கைலை
யாளிவிழி தனிலேயொரு பொறிசிதறியேகி
சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனெனவந்து
உருவாகி மலர்மீதி லானுர்-எங்கள்
ஓம்நமசி வாயவெனும் பரமனருள்மகனூர்
அப்பவே சென்னியோ றாருய்-மெத்த
வழகான செந்திரு புயங்களீராருய்
உற்பவ மானபனி ரெண்டு-விழிகள்
ஒளிவாகி வோராறு பெண்கள்பாலுண்டு
அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-தந்த
அரனுக்கு உபதேசம் சொல்லியேகொடுத்தான்
கயமுகா சூரன்முத லோரை-கந்தன்
கைவேலி னலவர்கள் கருவறுத்தாரே
தங்கவடி வேலலங் காரன்-மாது
தையல்தெய் வானைமண மேவுசிங்காரன்
தென்கதிரை மானகரி லங்கும்-சுவாமி
சிங்காரமாயுனது வருள்கிருபை பொங்கும்
சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக் கிணையான சித்ரமயில்வேலன்
சத்திவே லாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலிரெனவே வந்தருளும்நடையான்
கடகமெனு மானதிங் களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவருகையிலே

கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருகேதயங்க
செங்காவிப் பட்டாலே கொடி-கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள்பலகோடி
மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி.
சேர்க்கையாய் முரசு சங்கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத
பார்க்கவெகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே அரகரா வென்றுபுகழ்பெறவே
ஆணிப்பொன் மாலைக ளிலங்க-மொய்த்த
அழகான ஆலத்தி தீபமேதுலங்க
மாணிக்கப் பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறி யேபவனிவந்தார்
மதகரியோ வருகிறதைப் பாரும்-சுவாமி
மாணிக்கப் பேழையி லுகந்ததையும்பாரும்
கதிர்காமத் திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ்சாத்தி
கரியுலவு வனமூடு சென்று-செலலக்
கதிர்காமம் போய்வந்து நீராறுப்பென்று
சரியான பௌரணையை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி
வாரிபோல் பெருகி நீரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி.
கூரான வடிவேல் சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து
புள்ளிமயில் வேலர்விரை வாக-சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குளேக
வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்புகொண்டு
சித்ரமணி மலரணையில் தாவி-நல்ல
செங்கமலக் கரத்தா லணைத்திவர்கள்மேவி

கொத்துமுத்து நத்துவளை திருத்தி-இவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள்பொருத்தி
இங்கிர்த மணுளகுண நீதா-யெனக்கு
இனியசுக போகமத லீலாவிநோதா
எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
எனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா
அத்தைபெற்ற முத்தேயெங் கோனே-யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனேயம்மானே
முத்திரையிட் டிலங்கு செங்கையாலே-வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர்கையாலே
கலந்தணைந்த சுகந்தமண வாசன்-எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன்
சலதாரத்தைப் பழித்தகுழ லாளே-இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே
ந்தனுக் கிசைந்த மனையாளே-வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையாளே
வந்து வெகுநேர மாகுதடி-யெந்தன்
மாதுதெய் வானையெனைத் தேடிடுவாள் நாடி
போய்வாரேன் விடைதாடி யென்ன-வள்ளி
பூவையவள் கேட்டெந்தன் சாமிநீர்சொன்ன
வாய்ச்சம்பிர தாயம்வெகு வீச்சு-நான் [ச்சு
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபே
அங்கேபோய் செலுத்து மதிகாரம்-எந்தன்
அரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம்
இங்கிரண்டு நாளிருந்து போனல்-சுவாமி
என்னகுறை வாகிவிடுங் காணுமுமக்கதனல்
என்மனையி லிருக்கையிலே யவளேன்-உம்மை
என்தேட வேண்டியது காரியமுந்தாளேன்
ண்மையெனக் கின்னதென்று தானே-சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென் மானே
இங்கேவந்து நானிருப்ப தாலே-யென்னை
யெங்கேயோ வென்றுதெய் வானை யொருக்காலே

மங்கையருந் தேடுவா ளின்று-யெனக்கு
வள்ளி நீவிடைதாடி போய்வாரேனென்று
இவர்கூற வள்ளிமின் னளே-சுவாமி
யின்றிரவு யிங்கிருந்து போகலாம்நாளை
அவசர முமக்கென்ன யங்கே-சுவாமி
ஆனாலும் நீர்போக சம்மதியே னிங்கே
கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக்கஞ்சிநான் பயப்படவுமாட்டேன்
தேடியிங்கே தெய்வானை வரட்டும்-யென்றும்
செப்புவதும் யொப்பினையும் வள்ளிகை நீட்டும்
பார்த்தோதடி வள்ளிமானே-சற்றும்
பாராம லிம்மொழிக ளேன்சொல்லுவானே
ஆத்திர முனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கு நிகராவரோ பெண்கள்கோடி
சொந்தமாய் கிருபை பாராட்டி-அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி
வந்தபடி யாலவ ளுனக்கு-முந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு
அடக்கமா யிருப்பதுவே சிலாக்யம்-வள்ளி
ஆனாலு மில்லறத்துக் கதுதானேயோக்யம்
மடற்கொடி தெய்வானையவ ளிங்கே-நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே
போகவிடை தாவென வதட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோப மூட்ட
மாகனக மேடையி லிலங்கும்-உமது
மனையாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும்
தெய்வானை சொந்தமாய்ப் போச்சோ-நானுந்
திருட்டுத்தன மாகவந்த கள்ளிபோலாச்சோ
கைமாயஞ் செய்தோமோ நாங்கள்-ஒருவா
காணாதே மாலையிட்டு வந்தீரோவுங்கள்
சாதியா ரேசுவாரோ காண்-நீருந்
தலைமறையவெங் மனைக்கி வருவானேன என்னகாண்

ஆதியிலே யென்னையு நினைத்து-வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து
கூட்டிவந்தநாரதரைக் கேளும்-வனத்தில்
குளத்தருகிலேயிருந்த காடிபுலிவாழும்
காட்டினி லுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக்கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வர்
வாதலங்கள் செய்சபை முன்னாலே-வைத்து
தெய்வயானை யைத்தாலி கட்டினதாலே
அவள்மாத்திரஞ் சொந்தக் கிளையோ-சுவாமி
ஆனாலும் நான்கிழக்கு முகமிருக்கவில்லையோ
வள்ளியிவை சொல்லவே திகைத்து-சென்னல்
வள்மான தென்கதிரைவேலனும் நகைத்து
கள்ளிபோல் வீணிரை யாதே-பொல்லாக்
கசடான குறவருட சாதியொளியாதே
இரண்டுசமூ சாரமா காது-யென்று
நீனிலத்திற் சொல்லுவது சரியானதோது
அண்டர்குல மானேயுனை நாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி
நில்லுநான் போய்வாரே னென்று-சொன்ன
நினவறிந்து வள்ளியவள் சீறியெதிர்நின்று
வல்லப முமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும்
என்சமர்த்தைப் பாருமினி யென்றே-வள்ளி
இடைதனிலேசேலையை யிருக்கியெதிர்கொண்டே
அன்புற நெருங்குவது கண்டார்-வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார்
சொல்லுகிற சமாச்சார மென்ன-உமது
தொழிலை நானெடுகிலு மறிந்துமினியென்ன
நல்லதினி மேற்கொண்டு பார்ப்போம்-உமது
ஞாயமதைதேவசபையிலேசொல்லிக்கேட்போம்
தேவசபையிலே சொல்லிப் பாரு-அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு

ஓவியமே உன்னூறுதி கேட்க-யெழுதும்
    உடன்படிக்கை முறியுண்டோ கொண்டுவடிபார்க்க
உடன்படிக்கை முறியெழுதி தாறேன்-வள்ளி
    யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன்
கடக்கவெனைத் தள்ளாதே மானே-யென்று
    கட்டிமுத்த மிட்டது கசப்பேறுவானேன்
தனியே வனத்திலிரு பேருங்-கூடுஞ்
    சையோக வேளையிலே பார்த்தென்னை நீரும்
இனிய செந்தேனே கற்கண்டோ-உந்தன்
    இதழென்று சொன்னதும் மில்லையோவுண்டோ
முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ-இப்போ
    மூத்தகுடி யாளுமக்குச் சக்கரைபோலாச்சோ
என்னை நீர் வசைசொல்வதேனோ-சுவாமி
    யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ
தந்தையுங்கள் தேட்டை யெடுத்தாரோ-எங்கள்
    சாதியார் வந்து நிதந் தின்றுகெடுத்தாரோ
எந்தனுற் குறைகளே துண்டோ-சுவாமி
    இழுக்கெந்த சாதியிலு மில்லாமலுண்டோ
மங்களகல் யாணமதில் நல்லாள்-அந்த
    மணவறையி லென்தகப்ப னிட்ட நகையல்லால்
உங்களிடம் வந்தநாட் கொண்டோ-யெனக்கு
    ருத்திராடசவடத்துக்கொரு நவமணியுமுண்டோ
மாதிவை யுரைக்க முத் தையன்-வள்ளி
    மங்கைதனைப் பார்த்தேது சொல்வார்மெய்யன்
எதடி நீ பேச்சதிகங்கொண்டாய்-வள்ளி
    யென்னுடைய சாதியிலிழுக் கென்னகண்டாய்
குமேபரன் மகள்போல பேசாதே-உன்னப்பன்   [தே
    கொடுத்துவிட்ட வரிசைகளே வெளியேசொல்லா
சபையோர்க ளென்னவறியாரோ-இந்த
    தாரணியி லுள்ளவர்க ளெவருமறியாரோ
உடுத்திவந்த துணிக்கிவே றுண்டோ-களிம்பு
    ஊறியபித்தளை யோலைக்கிவே றுண்டோ

தொடுத்திருந்த கருகமணி போடே-யென்னை
துடர்ந்துவரும் போதுனைக் கேதுபட்டாடை
வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ்-சுத்த
வாணியர்கள் யெண்ணெயிட் டறியாததலையும்
புண்ணுக்கு போலிருக்கு மேலுங்-காட்டில்
புண்டிசெடி மூள்ளிமுத்து சுரண்டிடவிட்டாலும்
எப்போதுங் காய்கிழங்கைத் தின்று-நீயும் [ம்
இருந்தகெதிதெரியாதோ வரும் போதென்பின்னு
அப்பவே நானழைத்து வந்து-நலல
ஆபரணமானதையு மழகாயணிந்து
செப்பவள மாளிகை யமைத்து-உனக்கு
செங்கமலத் தாதிக்ளை யேவல்நேமித்து
நம்பிநான் செய்ததை மறந்து-வள்ளி
நாயகமே பேசுவது மென்னடியிகழ்ந்து
மாதேநீ பதராதே வாடி-யெந்தன்
மனமூழுது மறியாமல் சொல்லாதேபோடி
தோகையே இதுவென்ன மூர்க்கம்-உங்கள்
கூறறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம்
சாராயங் கள்ளுகள் குடித்து-குறவர்
சந்திக்கு சந்தியே சண்டைகள்பிடித்து
பூராயம் தெரியாமற் கத்தி-கண்ட
பூனைகளை யெறிவாரே முசலென்று குத்தி
தின்பதுவு மூண்டதிக மாக-குறவர்
சேரியிலே நீபழகி வந்தவைபோக
செம்பவள வாயாளே யென்று-சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங்கொண்டு
விண்ணாணம் பேசுவது சீரோ-சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றதுவுமாரோ
கண்ணப்ப னெச்சிதிங் கலையோ-சிவனுங்
கரிக்காகப் பாலகனைக் கொன்றவுமிலையோ
புத்தியுமக் கில்லாதே போமோ-கெட்ட
புனக்குறவர் பெண்ணை நீர் சம்மதிக்கலாமோ

யெத்திசையும் புகழ்பெற்ற நாதா-வென்று
இவள் சொல்லும் வகைகண்டு கூறுவார்தோதா
அடந்தேறுவார்குடிமிகுந் தால்-குறவர்
அவர் தனக்கே சிலவுக்கில்லா திருந்தால்
கடன் வாங்குவார் சம்மதித்து-தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து
கொடுத்து விட்டபணத்துக் கீடாக-வைத்த
குறத்திகளைப் பணங்கொடுத்த குறவன் வெகுவாக
அடுத்தவளை யனுதினங் கூடி-இவர்கள்
அஞ்சாறு பிள்ளைகளைப் பெற்றபின்தேடி
பணங்கொடுத்துத் திருப்புகிற போது-பெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள் யாது
குணமாக முன்னீடுவைத்த பழைய
குறவனுடன் போவதுங்கள் சாதியிலேமெத்த
இதுபுதுமை யிவ்வுலகி லுண்டோ-வள்ளி
யேந்திழையே யிதைவிட லெச்சைவேறுண்டோ
கதிகொண்ட மயில்வாகனத்தார்-இந்தக்
கதைசொல்ல வேவள்ளி யவளெதிருரைத்தாள்
குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ்-சுவாமி
கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியும்
மறந்தீரோ நீரறிந்த திலேயோ-என்னப்பன்
மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலேயோ
சிந்தைமகிழ்ந் தொருபெண்ணைத் தூக்கி-உங்கள்
சிவன்தலையில் வைத்துமே சுமந் துக்குச்சாட்சி
நந்திகேசுவரர் சொல்லக்கேட்டேன்-சுவாமி
ஞாயனிச மில்லாமல் நான்சொல்ல மாட்டேன்
ஆட்டுக்கா லதுதனை யெடுத்தார்-உங்கள்
அப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார்
கேட்டுப்பா ருமதுமாதா ஐயோ-ஒற்றை
மாட்டுக்காரனை வைத்திருந் ததுவும்பொய்யோ
கண்ணுயிரங் கொண்டநேத்தி-உங்களம்மான்
பெண்ணாசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி

பெண்ணொருவர் கொடுக்காத தெதினால்-உங்கண்ணன்
பெறுவயிறு கொண்டுவெழிக் கரையிலிருந்ததினால்
அண்ணனுமே மத்தளங் கொட்ட-சொந்த
அருமைமரு மகனின்று கைத்தாளந்தட்ட
விண்ணவர்கள் கூடியே நகைக்க-வந்த
வேதியரும் மாதவரும் கண்டுபிர்மிக்க
தேவடியாள போலுமது அன்னை-கூடுந்
தேவசபை யிலேநின்று ஆடலையோமுன்னை
பாவலருக் கருள்புரியுஞ் சீலா-இதையும்
பார்த்தவர்கள் சிறியாரோ தங்கவடிவேலா
பத்மாசூர னுக்குமிகப் பயந்து-உங்கள்
பரமசிவ னோடலையோ காட்டுவழிநுழைந்து
கைப்பொருளு மில்லாமல் தேகி-யென்று
கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவயோகி
கும்பமுனிக் கருள்புரிந் தோரே-என்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே
தென்பாக யென்மோக வள்ளி-இந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக்கள்ளி
குதிகொண்ட வனக்குறவர் சாதி-வகையை
கூறறிந்து சொல்லுகிறேன் கேளுமவர்சேதி
சதிர்பெருகுந் திருவிழாக் கடையில்-ஜனங்கள்
சந்தடிக ளாகவே சயனிக்குமிடையில்
கூசாமல் கூடவே படுத்து-தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து
பேசாம லோடுவது கண்டு-துறத்தி
பெரியதனக் காரர்களு மேபிடித்துக்கொண்டு
வம்பிலே தலைமயிரைக் கட்டி-குறத்தி
மார்பிலே போடுவார் சொல்லென்றுகிட்டி
செம்பாணி கொண்டுமே யிறுத்தி-அவர்கள்
சேலையை யுரிந்துசின மாகவே நிறுத்தி
அடிதண்ட மாகவே யடிப்பார்-குறவர்
அப்பவும் எடுக்கவில்லை என்றுமே துடிப்பார்

தடியடிக்கி யசையாத சாதி-குறவர்
சங்கைகெட்டு நிற்பார்கள் தெரியுமவர்சேதி
என்றிவ ருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராக நின்றேது சொல்வாளப்போது

தொண்டர்தொழு கின்றமயி லேறும்-சுவாமி
சொல்லுவே னுங்கள்குல வளமைகளைப்பாரும்
அடையாளஞ் சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள் கூடிவரு மாய்ப்பாடிவாழும்

இடையருட வளவிலென் னும்-உறியில்
இருந்தவெண்ணெ திருடினதை யாரென்றுகேளும்
அன்றுட னசோதை யறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகின்ற கயிறுல்வறிந்து

ஒன்றாக மாதரொரு பக்கம்-கூடி
உரலோடே கட்டினதைச் சொன்னாலும்வெட்கம்
கட்டுண்ட தும்ரோஷ மில்லையோ-பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்டதில்லையோ

வெட்டிய சமர்க்களத்தி லேறும்-கிருஷ்ணன்
விஜயனுட குதிரைகளை மேய்க்கலையோபாரும்
ஊத்துகிற கஞ்சிகளை யேத்தார்-கிருஷ்ணன் [தார்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கட்டியங்கேமேய்த்

கூத்ததிக முண்டின்னம் நிரம்ப-சொல்லக்
கூசுதே என்மனமும் என்றிவளியம்ப
கேட்டவடி வேலவர் கை நீட்ட-வள்ளி
கேளடியுங்களுட வீடுமலை நாட்டில்

நீட்டியிரு கால்களை நிறுத்தி-அதனில்
நெட்டு முட்டாவளை கூட்டியேபொறுத்தி
நத்திய கயிற்றால் வரிச்சு-மழைக்கு
நனையாமல் மூங்கிலிலையால் மேய்ந்தருச்சு

சுத்திவைத்த சுவரெல்லா மோட்டை-அசந்து
தூங்கவும் விடாதங்கு முணுமுணுத்தமூட்டை
ஆடேறி மேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிடமில்லை

மூடாத வாசல்களைக் கண்டு-பார்த்து
　　மூடினுலுசர வொருமுகட் டொழுக்குமுண்டு
தேடாத பொருள்சிலவு காணும்-வைத்த
　　தீபமுந்தெரியாது தோணுமல்தோணும்
கூடாது குறவீட்டை நம்ப-சற்றே
　　குந்தவைக்க முடியாது நசுநசுப்புரெம்ப
குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும்-உங்கள்
　　குறவருட பக்கியெல்லாங் கூறையிலேதூங்கும்
வரம்பேது மில்லையென் ளுளும்-யென்று
　　வடிவேலர் சொல்லவே வள்ளிமின்ளுளும்
தமக்கென்று சிறுகுடிசை கட்டி-குறவர்
　　தானிருப் பதுவேவசை யில்லாதகெட்டி
உமக்கொரு தலத்தினிலும் நாடி-சுவாமி
　　ஒண்டயிட மில்லாமல் மலைக்குமலையோடி
கையிலரைக் காசுமே இல்லாமல்-வீடு
　　கட்டியே குடியிருக்க வகையுமறியாமல்
வெய்யலிலும் வேனலிலுங் காய்ந்து-சுவாமி
　　மெத்தவருஷித்தமழை பனியால்நனைந்து
இருப்பதுவைக் கண்டுமனம் வாடி-உமக்கு
　　யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங்கூடி
சிறக்கவே கோவில்க ளமைத்து-உமக்கு
　　செம்பொன் மணியாபரணம் விருதுகள்சமைத்து
வடிவேலா வாவென்று யெண்ணி-உமக்கு
　　வரிசையிட்டு வைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி
அடியவர்கள் புண்ணியமீ தையா-நீரும்
　　அழகான கோவில்களி லிருக்கிறதுமெய்யா
தேருமத கரிபரியு மிரவல்-உமக்கு
　　ஜெயமேள பேரிகையுங் கோயில்களுமிரவல்
ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
　　இட்டநவ ரத்னமணி யாபரணமிரவல்
இத்தனையு முமக்கிரவல் தானே-குறவர்
　　இருப்பிடத்தைப் பழிக்குநீ ரெண்ணுமல்வீணே

வெற்றிவே லதுதானே சொந்தம்-உமக்கு [ம்
வேறேயொரு ஆஸ்திகளின் மேலென்னதொந்த

மச்சமுனி மறைபொருள் களாலும்-உங்கள்
வங்கிஷ வகுப்புகளைச் சொன்னூரே கேளும்

மச்சானே மறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொரு மாமனே அளவளந்ததாதன்

ஆத்தாளோ பாளூர்ப் பறைச்சி-அவளுக்
கருமையுள்ள தமயனையும் வளர்த்தவளுமிடைச்சி

தாத்தாவோ மீன்காரப் பரவன்-உமக்கு
தளகர்த்த னுனவனும் நல்லகுலமறவன்

ஆறுரென் றுமையீன்ற தய்யா-சங்க [யா
மாண்டியல்லோ சாதியிலே சொல்வார்க்ள்மெய்

வாமுறைக ளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள் தெரியாதோ பலசாதிக்கூட்டம்

இதற்குமுன்னே நானறிந் தாலும்-உமக்கு
இசைவேனே நீர்குட்டிக் கரணம்போட்டாலும்

அதற்கென்ன செய்யலா மய்யா-நாங்க
ளாலுலும் குறச்சாதி யென்பதும் பொய்யா

பண்டாரம் நானென்று கத்தி-யெந்தன்
பரணிதிரே வந்தீரே யதுவென்னபுத்தி

கொண்டுகுலம் பேசுவது பேச்சோ
கொய்தினை மாவுக்கெனே கெஞ்சினதும்போச்சோ

பேருதெரி யாமலுரு மாறி-வந்து
பிசகுசெய்த மதகரி யினுலேமதமீறி

பாரமத யானைவரா விட்டால்-உமது
பாசாங்குக் குள்ளாக மாட்டேனில்லா விட்டால்

வழிகியிந் தாடிகுற வஞ்சி-யென்று
வனவேடன் போலவந்து யென்னெதிரேகெஞ்சி

களையாகு தெனவந்து மூட்டி-நீரும்
காரியங்கள் கொண்டபின் பேசுகிறீர்கெட்டி

வலிய நான் வந்தேனே தொட்டு-நீரும்
வஞ்சகம் பேசுகிறீ ரிதுவென்ன செட்டு

சலியாமல் நீருறுதி சொன்ன-மொழிகள்
தவறுவதோ கலிகால மானாலுமென்ன
பொன்னடி துலங்கிய யென்மாமி-பெற்ற
புண்ணியனே பனுதினமு மகலாமல்சாமி
யென்னருகி லிருமென்று கேட்டால்-சுவாமி
என்குலத்தை நீர்பழிக்க யுமக்குவிளையாட்டா
வையகத்துக் கேர்க்காது யென்னை-நீரும்
வஞ்சகமா யிகழ்ந்து பேசுவதுதன்னை
தெய்வானையோ சொல்லி விட்டாள்-எந்த
சிறிக்கியுமக் கிவ்வளவு சூதுசொல்லிதொட்டாள்
எப்படியோ நானறிய வில்லை-லோக
மெங்கும் நீர் போகாதவிட மொன்றுமில்லை
இப்படியு மருந்திட்ட தாரு-உமக்கு
யேலாதோ சொல்லவந்த மங்கையர்கள்பேரு
வருந்திவிருந் தளித்தவளைச் சொல்லும்-அவளை [ம்
மயிர்பிடித்து கொண்டாரோன் சற்றேயிங்கேநில்லு
மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்ல மாட்டீரோ நானெதுவுங்கேட்டால்
முருக்குவளை தாதிகளே வாடி-நம்ம
முத்துலிங்க சுவாமியை நீ கூட்டிவாபோடி
கருதுமருந் திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனென்னுங் கந்தருக்கு கைபார்க்கவேணும்
மின்னாரே யென்றிவளுஞ் சொல்ல-யெங்கள்
வேலரிது புதுமையெனக் கேட்டவருமென்ன
யென்னடி வீண்யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டி லேயிருந்துண்ண நீ கண்டாய்
என்னுடைய சொல்லுறுதி மீறி-நீயும்
எதிர்பேசினதி னாலேயுன்னை நான்சீறி
சொன்னவகை யல்லாது கண்ணே-சும்மா
தோகையே நானுமுனை பேசுவேனோபெண்ணே
மயங்காதே நீவள்ளி மாதே-உந்தன்
மனமறிய நான்சொன்ன தல்லாதிப்போதே

ஜெயமாக நான்போயி வருவேன்-வள்ளி
தினமுழனேப் பிரியாமல் தெரிசனமுந்தருவேன்
உந்தனைவிட் டகல்வேனே மானே-யென்று
உபசாரஞ் செய்தங்கிருக்கையிலேதானே
கந்தனையும் கோவிலுக்குள் தேடி-அங்கே
காணுமல் தெய்வானை யம்மன்மணம்வாடி
மங்கையரே சுந்தரப் பிரகாசன்-அந்த
மாணிக்க கெங்கைக்கு போனமுருகேசன்
எங்கேயென வேலவரைத் தேடி-நீங்கள்
இதுநிமிஷம் வரவேணு மென்றிடவேயோடி
தாதியர்க ளெல்லோருஞ் சென்று-யெங்கள்
சண்முகவே லாயுதனைத் தேடினுரென்று
ஆதிசிவ மாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்த வேலவரைக் கண்டீர்களோயிங்கே
பாதிபிறை நுதலழகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக் காணேமென்று தேடுவதினுலே
கதித்தபுகழ் கொண்டமுனி வோரே-எங்கள்
கந்தனையுங்கண்ட துண்டோ சொல்லுவீர்நீரே
காணிக்கை கொண்டுவந் தோரே-எங்கள்
கட்டழகி தெய்வானை மணவாளனுரே
மாணிக்க கெங்கை நீராட-இங்கு
வந்தவரைக்காணீர்களோ யினியெங்கேதேட
பாங்கியவர் நதியெங்குந் தேட-கோவில்
பணிவிடைக்காரர்தெரு வீதிவழிநாட
ஏங்கியவர் தேடுவது கண்டு-சுவாமி
எங்கோனும்சிந்தையி லறிந்தன்புகொண்டு
நினைவில் மறக்கா தெய்வானை-இந்த
நிமிஷமே கூட்டிவா வென்றேவுஞ்சேனை
எனையழைக்க வேணுமென்று தேடி-வாரார்
ஏந்திழையே நான்போயி வரவும்விடைதாடி
தாடியென்று சொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ் சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து

தேடிவந்த பேர்களை நா னடிப்பேன்-அந்த
தெய்வானை வந்தாலு மேசண்டைபிடிப்பேன்
என் னுடைய கணவனையுந் தேட-அவளுக்
கென்னவதி காரம்விடை கேழ்க்குறீரோட
மன்னவா யிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில் நின்றே
எனக்குரிய மானே நீ கோபம்-இப்போ
யென்பேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம்
உனக்கு நான் பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ
போய்வாரேன் வள்ளிதய வாக-எனக்கு
புகழ்ந்துவிடை தாடிதெய் வானையிடமேக
வாய்திறந்து சொல்லுமென மகிழ்ந்து-என்று
வடிவேலர் கேழ்க்கவே வள்ளியுமுகந்து
மறைபுகழு கின்றவடி வேலா-சுவாமி
மனவருத்த மில்லாமல் போய்வாருஞ்சீலா
இறையவருக் குகந்தமக ளூரே-யென்று
இவள்சொல்ல வேலர்வழி கூடநடந்தாரே
சித்திர வடிவேலர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டடிபணிந்தார்
வெற்றிமயி லோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய் வானையுங் கண்டெதிரேசென்று
மங்கையரே யெனைத்தேடு வானேன்-நம்ம [ன்
வள்ளியம்மை தன்னுடைய கோவிலுக்குபோனே
செங்கமல மாதேயென் கண்ணே-இப்போ
தேடினது மென்னவகைசொல்லாயோபெண்ணே
தெய்வானை யென்றூர் துணிந்து-அந்த
தேவிசெவ்வேள் பாதமல ரடிபணிந்து
வைபோக மானவடி வேலே-உடைய
மணவாளா உமக்குதித மிதுதானோவேலே
இளையாள்மே லிருக்கிற பாசஞ்-சுவாமி
யென்பேரி லேனில்லை யுமக்குவிசுவாசம்

அழையாத விருந்தோ நீர்காணும்-வள்ளி
 யவள்மனைக்கு நிதம்வலியப் போகவோவேணும்
முழுக்கவே யும்மாலே யேச்சே-சாதி
 முறைதவறிக் குறவருட சம்மந்தமாச்சே
இழுக்கான சாதியி லேகி-மாலை
 இட்டாலு மேன்மையது தருவாரோயோகி
அடிக்கடி நீயவள்மனைக்குப் போனால்-மெத்த
 வளக்கிப் பாகவே சொல்லுவாளானால்
குடிதனி லுயர்ந்த வளுமில்லை-வ்ள்ளி
 குறவர்குல மானதால் சொன்னேனென்சொல்லை
நிசமென்று நீரெண்ணு வீரோ-உமக்கு
 நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமதவீரோ
அசையாம லானந்த மீறி-வள்ளி
 ஆசைகொண்டு பேசுகிறீர் நானுமக்குப்பாரி
யாகினா னெடுத்தென்ன கோட்டை-புவியில்
 அறியாரோ நீரெனக்குத் தேடிவருந்தேட்டை
தேகியென வாண்டிபோ லானீர்-சுவாமி
 தேவியவள் வள்ளிதனை மாவுதிங்கப்போனீர்
திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
 சித்தமது யெப்படியோ கதிரைவடிவேலா
அரிமருக ரேயென் றுரைக்க-எங்கள்
 ஆறுமுகன் சொல்லுவார் தெய்வானைமெய்க்க
மானே நான் உன்வருதி பெற்றேன்-பின்பு
 வள்ளிதனை மாலையிட்டு கூட்டிவந்து வைத்தேன்
தேனேயென் மேற்பிழைக ளில்லை-உனக்கு
 தெரியாதோ வீணில் பேசுவதுதொல்லை
கோவிலுக்கு நீபோடி யென்று-யெங்கள்
 குமரேசன் சிம்மாசனத்தி லேயொன்று
சேவலொரு கையினி லிருக்க-யெங்கள்
 சித்தவடி வேலவருமே கொலுவிருக்க
சூடதி வாரா தனைக்கு-வந்து
 சூழ்ந்தார்கள் கோடானு கோடியன்றைக்கு

அடியவர் பணிந்து துதிபாட-கதிரை
ஆறுமுகன் மீதினில் கவிமாலைசூட
சிம்மா தனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயன வந்தார்கள் சூழவேபெருக்க
அம்பா பரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புடன் அருளுவா ராருமுகவேலன்
துன்பவினை யணுகாமல் தானே-நீங்கள்
சுகமாக வாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே
தென்கதிரை வேல ரருளாக-வந்த
தேவர்களும் மனிதர்களுந் தங்கள்பதிக்கேக
சித்தர்களும் வந்து நிதம்பணிய-இந்த
செந்தமிழ் தனக்குதவி செய்சுப்பிரமண்ய
கர்த்த னருளாலே குறைவில்லை-ஆருங்
கதிர்காம மென்றாலும் வருமைகளுமில்லை
தேவர்களும் முனிவர்களும் வாழி-எங்கள்
திருமாலு மயனரனு மூமையாளும்வாழி
நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்னாளும்வாழி
புள்ளிமயில் வடிவேலும் வாழி-இந்தப்
புவியெங்கு நகரத்தார் புகழ்பெறவேவாழி
வள்ளிதெய் வானையுடன் மேவி-யோக
வாழ்வுபெறுங் கதிரேச றென்னாளும்வாழி.

கதிரேசன் ஆனந்தக்களிப்பு
முற்றிற்று.

கதிர்காமத்து எசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேற்சிந்துபாடச்
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத் துதி பண்ணியே

சத்திசிவனருளும் வெத்திவேலவர்மலர்த்
தாளினை தன்னைமற வேனே-கந்த
வேலனுமெங்கள்முருகோனே

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன்குருவைப்பணிந் தேத்த-வெகு
இன்பமுடனேகதை வாழ்த்த

இன்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
எங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும்

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாகச்
சேவல்கொடிதுலங்கு தேவதையா-இந்த
மாவளமாநகரின் மீதையா

மாவளமானயிந்தப் பூநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகேசன் பெண்ணே-வேலவ [ர்
இங்கேயிருக்கிறார்தான் கண்ணே

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
அந்தமதகரிமேல் பாரையா-மேவி
அந்தாபவனிவார தாரையா

அந்தாபனிவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வாரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி

சேனாதிபதியிவராானையின் மேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனை-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளேயெங்கள்பரமேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்க ளேஸ்வரி

காத்தாளேசெங்கைவேல னாத்தாளிவளென்றீரே
கைலாசநாதர்க்கிவ ளாரு-யெனக்
கொயிலாகசொல்லுமறு சீறு

ஒயிலாகயீஸ்வரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனை யாளடி-வாலை
சத்திசிவனென்பார்கள் கேளடி

சத்திசிவனையவர் பெற்றிடும்ரதிமதன்
　　தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
　　ஏனவர்தன்னையெரித் தாரையா

ஏனெரித்தாரென்றுயே மானேயுடையவர்மேல்
　　யேதுக்குப்பாணமதை எய்தான்-சிவன்
　　வாதுக்கனலாகவேதான் செய்தான்

வாதுக்கெதிர்த்துவந்த போதுவிஜயன்வில்லை
　　வாங்கிச்சிவனையடித்தே வைதான்-சிவன்
　　தாங்கியருளவர்க்குயேன் செய்தான்

தாங்கினதவத்தாலோங்கிய பார்த்தனெனும்
　　தானேபொறுத்தாதருள் சிந்தையார்-இந்த
　　ஆனைமேல்வாரகந்தன் தந்தையார்

ஆனைமுகமும்பெரும் பானைவயறிலங்க
　　அந்தாயிருக்குராரே பாரையா-ஒரு
　　தந்தமிலங்கியவ ராரையா

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்கத்
　　தனியேயிருக்கிறவர்தான் பெண்ணே-வள்ளிக்
　　கினியகுமரன்தமையோன் கண்ணே

இனியகுமரனையுங் கனிவாய்வளர்த்தெடுத்த
　　யீசனுக்குயிந்தப்பிள்ளை யேனோ-நந்தி
　　வேஷமெடுக்கவிதி தானோ

வேஷமெடுக்கக்கண் டேசியவள்ளியஞ்சி
　　வேலனெனுங்கந்தனைக் கொண்டாடினாள்-ஒரு
　　தாழ்வின்றிமாலையிடக் கூடினாள்

தாழ்வின்றியேபுவியில் வாழ்வுமிகுந்தகந்தன்
　　சங்கையில்லாமல்கெஞ்சி நேரே-குற
　　மங்கையைக்கூடிக்கொஞ்சி னாரே

மங்கைகுறவருட சங்கையல்லடிபெண்ணே
　　வந்தபகவன்முனி வேண்டி-ஆதி
　　சொந்தமாய்ப்பெற்றவள்ளி தாண்டி

சொந்தமாய்வேலனுக்கு மிந்தவள்ளிக்குமுன்னே
　　சூட்டவில்லையோ மணமாலை-திருப்
　　பூட்டவில்லையோ புவிமேலே

பூட்டவேதெய்வானையைக் கேட்டுமுன்னாளையிலே
பூமணஞ்செய்தாரடி வேலன்-ஆழி
வாமணன் தங்கையருள் பாலன்

வாமணனேமஞ்செய்து தேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை மின்ன-யிந்தத்
தந்திமேலேறிவார தென்ன

தந்தியிலேறிவார இந்தத்திருவிழாவின்
சங்கையதுதாண்டி கண்ணே-சுவாமி
இங்கேவளமையிது பெண்ணே

இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
இருபுறமும்ஜனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கற்பூரதீபமதை தாண்டி-வாரூர்
சுப்பிரமணியனுக்கே தாண்டி

தாண்டியுபசரித்து வேண்டிதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா

சித்திரமானஅன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப் பாரடி

நந்தவனமும்வைத்து சொந்தமடமுங்கட்டிய
நகரத்தாரென்றாலவர் யாரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த வூரு

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றாறூ ராரடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டை யாரடி

நாட்டுக்கோட்டை யாரென்றால்வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானையா

தானையாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேவியாபாரமும்-செய்ய
வந்தவர்களிவரென் றேனாமும்

என்னேரமுங்கொழும்பில் சொர்னயாபாரஞ்செய்தால்
இந்தக்கதிர்காமத்தை நாடியே-இவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமாதப்
பௌரணைக்கேவரு வாரடி-இங்கே
வருஷங்கள்தோறும்வெகு சீரடி

வருஷங்கள்தோறுமிங்கே வருவாராஞலுஞ்சொந்த
மானகர்க்கேகிஞலப்போது காண்-இங்கே
தான்வேலெடுத்துவாரதாரு காண்

ஆருகாணென்ருய் புகழேரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள்

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிகுந்தவரே தோணும்-நல்ல
கல்விமிகுந்தவரே காணும்

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே

நாட்டுக்கோட்டையாருக்கு தீட்டும்புகழபடைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வ தேதையா

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவருமற்செய்துவந்ததோதிஞல்-புவியில்
இவரேநகரத்தாரென் ருேதிஞர்

இவர்களைப்போலநேகர் எவ்வளவோதர்மம்செய்தார்
ஏனயோர்காணுமந்த நாளிலே-அப்போ
தானவர்க்கந்தபேரே னில்லை

பேர்புகழ்சரிகைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதிஞல்நகரத் தாரே-யென்று
யெத்தலத்திலுமுரைத் தாரே

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
இருக்குங்கோயிலையெல்லாந்தானையா-பொன்ஞல்
சிறக்கவலங்கரித்த தாரையா

ஆறென்றாய்பெண்ணே யெங்கும்பேறானதென்மதுரை
ஆலயத்தைப்புதிப்பிக்க தாரடி-வாடி
வேலனருள் நகரத் தாரடி

வேலனைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவும்சிதம்பர நடேச னார்-சபை
யாவும்புதிப்பிக்கிற தாரையா

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
புவியிற்புகழ்நகரத் தாரடி-முகில்கள்
குவியும்தன்மைபோல்கொடை யர்ரடி

கொடையார்கள்தர்மம்செய்ய சடையாரோவாணிபத்தி [ல்
கூடும்முயர்ச்சியுள்ளவாழ்வி லோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின்கேள்வி யோர்

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார்தர்மம் நிலை நாட்டினார்-நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினார்

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேற்
சொன்னகவியெங்கும் பிரகாசம்-ஓகோ
மன்னவருமக்கெந்தத் தேசம்

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணி தானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி

நானடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினங்களெப்ப காணும்-அதைச்
சொல்லநாமிங்கேவர வேணும்

சொல்லக்கேள்சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்கித் தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி

பாதகந்தன்னைப்பரி காரமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய வேணும்- நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும்

காணுந்தவமிகுந்த கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகனடி- நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகனடி

வாகன்செந்தூரானென்முல் வையாபுரிப்பழனி
 மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
 சாமிமலைக்குகந்த தாரு
சாமிமலைமுதலாய் பூமிதனிலுள்ள
 தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
 விளங்குங்கதிரைப்பதி யாண்டி
ஆண்டிக்கிவ்வுலகெல்லாம் வேண்டியபதியென்முல்
 அத்தலங்களிலேது காணும்-இவர்
 சித்தம்வைத்திருப்பதெங் கோனும்
சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
 சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
 செந்திருவாழ்கதிரை நாட்டார்
நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
 நாட்டுப்பதிகளில் செல்வாரே-நாமும்
 கேட்டவரங்கள்தருவாரே
கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
 கேசவன்மருகனுர்க்கே-யெண்ணி
 வாசமாய்நம்பிவந்தோர்க்கே
வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
 வாருமையாபுகழ் வாழி-யினி
 கூறும்ஜெயமங்களம் வாழி
வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
 வாழியடியவர்கள் வாழி-எங்கள்
 மேழிக்கொடிக்குலமும் வாழி.

கதிர்காமத்துஏசல்
முற்றிற்று.

கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்ற குயில்கூவும்நல்ல
 தென்கதிர்காம மதில்மேவும்

ஆறுமுகன்கசிரேசனின் மேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனின்மேல்

மங்களஞ்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாட

சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே

சுந்தர நீரணி ஆறுமுகன்மீதிற்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்

சிந்தைக்கிசைந்தவேளை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர்களைப் போற்றி

சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையுமே சிறக்க

வந்துதவிசெய்யவேணு மம்மா நானும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா

கந்தன்கதிர்காம வேலவனேபுவி
கார்க்குமறைபுகழ் லோலனே

யெந்தனுக்கேயனு கூலனேதொழு
தேத்திப்பணியும் சீலனே

மங்கையரெல்லோரும் வாருங்கடிஇந்த
மாணிக்கக்கெங்கை நீராடுங்கடி

சிங்காரமாய்ப்பணி பூட்டுங்கடிமுகம்
சிறந்தகுங்குமந் தீட்டுங்கடி

கூந்தலுக்கேமலர் மாலைகட்டி நல்ல
கோலவர்ணபட்டுச் சேலைகட்டி

சேர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக் கொண்டாடுங்கடி

ஐயமில்லாமலே நாடிவந்தஇந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த

செய்யிழைமார்களே வாருங்கடிகவிச்
சிறப்பைச்சொல்லுகிறேன் கேளுங்கடி

ஓதியசெந்தமிழ்ப் பாடிடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக் கொண்டாடிடவே

ஏதுபிழைக ளிருந்தாலும்சுவாமி
ஏழைக்கிரங்கி எனையாளும்
ஆறுமுகனென் றுபேருடையானெனை
யாளும்கதிர்காமம் ஊருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான்
சத்திக்குகந்த மகன்தானேஇவர்
தந்தையுமுக்கண் சிவன்தானே
எத்திசையும்புகழ் மால்மருகன்றன்னை
ஏத்திக்கொண்டாடலாம் வாருங்கடி
வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ் சந்தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளியவலெங்கும் தூத்தினர்
சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோங்கும்
மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
மரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
குஞ்சரங்களெங்கும் நாட்டமும்
கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
கரடிமான்மறை கும்மலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
வண்டுகள்கீதங்கள் பாடுவதும்
மாணிக்கக்கெங்கையா ரோடுவதும்நித்தம்
மாதவர்வந்து நீராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரேகதிர்
காமத்தைநோக்கி வெகுபேரே
வீதியலங்கார மெத்தவடியிதில்
மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி

சோதிமயமான கோபுரமுங்கோவில்
சூழ்ந்ததிருமதில் தாவாமும்
குமரன்கோவி லிலங்கு துவாரிதில்
கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
யம்மைதெய் வானைக்கிமாடமும்
என்னசொல்வேன்கதிர் காமத்தின்கோவி
லிலங்கியவலங் காரத்தின்
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
ஸ்தானிகராவதும் சிங்களவர்
மன்னரசுக் குருத்தவர்கள்விட்ட
மானியங்கள்செய்பப் பெற்றவர்கள்
புத்தமதத்தி லுகந்தவர்கள்கந்தன்
பூசையில்நித்த மிகுந்தவர்கள்
நித்தமும்சிங்களவர் கூடுவதுமிவர்
நேர்ந்துபணிந்து கொண்டாடுவதும்
தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்பர
தேசச்சன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமைசொல்ல நல்லதடி
யெண்டிசைதோறும் புகழ்வார்கள்கொழும்
பெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி
செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடி அவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி
சிறப்பைச்சொன்னவ ரேகாணும்அந்த
தென்னிலங்கை யென்பதுதானும்
இருப்பதெந்த விடங்காணும் அதற்
கெப்படிப்போனால் தடந்தோணும்

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்த
கார்க்கடல்மத்தியில் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா
சொல்லுகிறேன்கேளடி மின்னாளே தேவர்
சொன்னசாபத்தால் முன்னாலே
வெல்லவேமாருதம் வீசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே
வந்துவிழுந்த இடமாச்சுஇந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும்
ஏழுசுற்றுக்கோட்டை யாக்கியேஇதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமென்றுபண நட்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே
ராணுவத்தோடேஜெயம் பூண்டான்மன்னன்
ராவணன்தென் னிலங்கையாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
பொற்கொடிசீதையை வனத்திலே
கண்டுசிறையெடுத்தோடி வந்தான்ராமன்
கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண்டே திகைத்தான் அந்த
நேரம்வருணனையு மழைத்தான்
சிந்தையினாலே மனமுகந்துராமன்
தெர்ப்பசயன மதிலிருந்தான்
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
யாகுமரி யெல்லைகண்டுறுதி
பரப்பிலேபத்து யோசனையாய்க்கவிப்
படைமலைகொண்ட தற்கிணையாய்
உரத்துயோசனை நூறுமட்டும்அணை
உண்டுபண்ணிலெங்கைக் கோட்டைமட்டும்

நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராட்சதக் கும்பழியத்திரு
வணசிதருண்டு தான்மறைய
பின்னுலிலங்கையைச் சீராக்கித்தவப்
பெருமையால் கொஞ்சம்பேராக்கி
அன்னுள்விபூஷண னுண்டுவிட்டார்பின்பு
அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார்
நாட்டமுள்ளகயற் கண்ணுளேலெங்கை
நகரம்நாள்சென்று பின்னுலே
கோட்டையழிந்து கடலாச்சுஇது
கொஞ்சமாய்த்தீவிங்கே துண்டாச்சு
அப்பாலித்தீவு சீரில்லாமல்இதில்
ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பாதகாடு மலையாச்சுபெரி
யோர்களுலாவு மிடமாச்சு
நயமிகுந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
இயக்கரென்றெரு ராட்சதனும்இதில்
இருந்தரசிட்டான் ஏச்சவனும்
நத்தியேநாயர் சிலகாலமேல்
நாட்டையாண்டு வருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினர்சிலர்
புத்தமதத்தைக் கொண்டாடினர்
திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெற்ற ஞாயாதி
விஜையராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி
தலைமன்னுரென்று பேட்டைகட்டிராஜன்
தம்பனைநாடென்று கோட்டைகட்டி
சிலைவலியைக்கொண் டாடக்கண்டு
தென்னனியக்கர் மார்கள்கூட

செப்பமுடனிதை யாளவந்தான் வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்
அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி
வங்காளர்சிங்காளர் வெள்ளாளர்
மதசமயத்து வல்லாளர்
இங்கேவந்துகுடி ஏறினர்இதற்
கிசைந்தரசரு மீறினர்
சிங்களப்பாஷையு மேலாச்சுஇதில்
சிவசமையமு முண்டாச்சு
மங்கையரேசில ராஜாக்கள்புத்த
மதசமயத்தை மேலாக்க
பாண்டிசேரசோளத் தீரர்களும்வந்து
பட்டமாண்ட மாவீரர்களும்
வேண்டிகோட்டைகள் கட்டிக்கொண்டார்மதம்
வேறுசெய்யச் சண்டையிட்டுக்கொண்டார்
பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டுஅந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு
உன்னிதமான மலையுமுண்டுஇதில்
ஓங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்வரம்வெகு முக்கியமாம்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம்
கேட்டவர்க்கே யனுகூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ள நகு லேஸ்வரமாம்சிவ
நாதர்க்குகந்தகோ ணேஸ்புரமாம்
தண்டேஸ்புரம்வெகு தகுதியாய் ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமெய்த்த குமாரபுரம்புக
ளிலங்கும்சந்திர சேகரபுரம்

கண்டவர்மெய்த்த மாவிட்டபுரம்ராம
கர்த்தரால்செய்த தனேகபுரம்
தொண்டர் துதிக்கும் தலங்களிதாம்பின்னம்
தோணுதிருப்ப தனேகமதாம்
ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடிமின்னே
ராமனுதனு லமைந்ததடி
பூமிக்குருத்தான மன்னர்மெத்தப்பட்டம்
பூண்டரசிட்ட நகாமெத்த
கண்டியென்றும்கோட்டைக் காடிதென்று நல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டடமாங்கோட்டை
அனுராசபுர பட்டணமாம்
முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முருகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தனபுரியென்று ஊருமுண்டு அதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு
பன்னகாமமதும் பறைநாடாம்யாழ்ப்
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்கு தனேகவெல்லேஇப்போ
எனக்குச்சொல்லச் சமையமில்லே
கண்டவிடமெல்லா முராச்சுகோவில்
கட்டியகட்டடம் பேரர்ச்சு
திண்டுமுண்டாய்ப்பழி கொண்டார்கள் நல்ல
சிங்களரோடர சாண்டார்கள்
கண்டியையாண்டிடும் வீரதுங்கன் இதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கம
தண்டிகையேறிய சூரர்களும்இவன்
தலைமுறைவரை ராஜர்களும்
தொண்ணூற்றுமுடி மன்னரடி அதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்கள்மெய்திடு மாகரில் இதில்
மேவியரசிட்ட பேரவரில்

கண்டியாசனும் மின்னாலே
　　கட்டடங்காணலாம் கண்ணாலே
வண்டனைப்போய்க் காரனடி அவன்
　　வம்மிஷப்நாயக்க ராஜனடி
அதற்குமுந்திய ராஜர்தொடுக்கட்டி
　　ஆண்டவிதமெல்லாம் சீறுகெட்டு
மதிப்பதாக்கிடந் தோணாமலைக்காடு
　　மண்டியிருப்பதுந் தானுமே
இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன் இந்த
　　இலங்கைநாடெல்லாம் ராசசிங்கன்
சங்கையுடனர சாளையிலேசீமை
　　தன்னுருந்தந்த வேளையிலே
சிங்காரக்கப்பலில் பறங்கியேஇந்த
　　தீவுக்குள்ளேவந்து இறங்கியே
தங்கச்சிகரம் தலைவகுத்துப்புத்தர்
　　தாவுங்கழனித் திசையடுத்து
கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
　　கொழும்பென்று சொல்லிபேர்நாட்டி
வெட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டி நல்ல
　　விஸ்தாரமாத்திர பேட்டைகட்டி
தொட்டதிருக்கோண மாமலையும் அந்த
　　துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்தள்ளி விரைவாகிவந்து
　　உலாந்தாக்காற ருசாராக
ஆண்டுசிலகாலம் விட்டார்கள்பின்பு
　　ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மந் நிலைநிறுத்தஇந்த
　　மேதினியையெல்லாம் சீர்திருத்த
கும்பமுனியார்வந்து ஒட்டிக்கொண்டார்இந்த
　　கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெற்றிலுற்றார்கோடு
　　வங்காளக்கச்சேரி கட்டலுற்றார்

கண்டியாசனைத் தெரிந்திட்டார்பெருங்
கள்ளர்களைச்சுட்டு எறித்திட்டார்
வண்டிக்கிரோட்டுக ளுண்டுபண்ணிஇதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி
துறைமுகங்களை நேராக்கிகாப்பித்
தோட்டங்களை எல்லாம்சீராக்கி
நிறையஇந்தியாச் செனங்களும்ரேகு
நிறைந்ததிர்வைப் பணங்களும்
மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும்ஆபீசை முந்திவைத்தார்
என்னசொல்லுவேனடி மின்னரசேஇந்த
இங்கிலீஷ்காரர் தன்னரசை
பூட்டிறயிலையும் நடத்தினார்எங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினார்
தாஷ்டிகமான கடலலைக்கியூட
தடுத்தணைகட்டியேநெருக்கி
தண்டவாமிசூட்சம் வைத்தாரேமலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
கங்கையும்சிங்கார முண்டாச்சுவெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு
பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும் வித்தையுமேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால்ஒரு
தாழ்வொன் றுமில்லையே தோழிப்பெண்ணே
தாழ்வில்லாத்தன்மையுடன் வாழும்கவி
சாற்றியமன்னவரே கேளும்
ஆளுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா
ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டு.மின்னேரத்திலே
கூறவுங்கேளுங்கள் பெண்ணாரேவர்ன்ன
கோலவிழிக்கயல் கண்ணாரே

அண்டமெல்லாமொரு தகத்திலேகட்டி
ஆண்டகிரேதா யுகத்திலே
கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே
பாரவினையாளுக் கொஞ்சாதவெகு
படைப்பெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட
வாசமுள்ளசுர நாளையிலே அவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசரைவீடு மிதில்தாண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்தாண்டி
குன்றென்னுஞ்சூரரைத் தூக்கினார்தேவர்
கோனுக்கரசை உண்டாக்கினார்
அன்றுமுதல்கந்தன் வாசமடி இதில்
அண்டர்களும் விசுவாசமடி
காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காமமென்ற பேரையுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டுவந்தநம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி
மன்னவரே கவிசொன்னவரேஇங்கு
வாருமையா சொல்லக்கேளுமையா
மின்னியவேலவரை வாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற
விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முரசினமும்
முழங்கச்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி
மூலஸ்தானந் தெரியாமேசபை
முன்ஸ்தலமண்டபந்தோணுமே
சீலமிகுகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே எதுக்கையா
திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி

முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
 முன்மணிவாசலுந் தோணுது
முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
 மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன் தன்னை
 நானறியவ்கை சொல்லுமையா
நானுமறிந்தது மில்லையடிசொன்னால்
 நம்புவையோ எந்தன்சொல்லையடி
தேனருந்தவழி தோணவிட்டால்கந்தன்
 சேருவை காணமுடியாது
சேருவைகாண முடியாவிட்டால்இந்தச்
 சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவனறியாமல் நித்தம்
 ஆருக்கலங்காரம் செய்வார்கள்
ஆருக்கென்றால் வர்னப்பேழையொன்று அதற்
 கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
 பவனிவாரது முண்டுமடி
பவனிவந்திடும் பேழையதுஎன்ன
 பாவிணையாகவே சமைந்தது
அவனியெல்லாம்புகழ்ந் தேற்றபேழைக்
 கருள் நிறைந்தது மெவ்விதங்காண்
அருள் நிறைந்து சமைந்தவித்தைவெகு
 அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குறியறிந்து துலக்காவிட்டால்கண்டு
 கொள்ளமுடியாது வள்ளலையே
வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
 வச்சிரத்தட்டோடு போடாமல்
தெள்ளியமாமணி மேடையெல்லாம்செய்து
 செப்போடிட்டது மேதுக்கையா
செப்போடல்லவோ தோழியரேயிது
 சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குஇது
 செப்போடாகவே தோணுமடி

செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா
அறிந்ததுண்டய னுத்தரவால்பன்னி
ராண்டுக்கொருதர மாத்தினவர்
உரியசுத்தமவு ணங்கொண்டுசமா
துகம்தடைந்தவர் கோடியுண்டு
கோடிபேருண்டென்றும் சொன்னவரேகந்தன்
கொலுவின்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண்
சேகரமான மலைகளுண்டுசுத்தி
திரண்டிருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி
போனவரந்த மலைவளத்தைச்சொல்லிப்
புகழக்கேட்டேன் அதின்விதத்தை
ஆனலவ ரெப்படிப்போனார்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண்
ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவி னல்தாண்டி
ஏகினுலந்தக் கதிர்மலைக்கிவழி
இசையத்தோணு மிருள்விலக்கி
இசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
ஏகமிருகசஞ்சார மென்றீர்
திசைக்கிச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ
விட்டுவிடாதது மெய்யதற்கேகதிர்
வேலவனுத்தர வாவதற்கே
தட்டுப்படாது மிருகமெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம்
நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை

அடர்ந்தமேளத் தொனிகளுண்டேயங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ
அண்டர்கள்கூட்டமதிகமுண்டு அப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவுந்தோணுது தோழிப்பெண்ணே
தோணுதென்றது மெய்யவரும்இருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ
கண்டுதொழுவ தெல்லாமலையும்எங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால் கண்டபேருமில்லை
அங்கேதுடிவயிரவன் காவலடி
காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவுஞ்சமாதொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குமதை
சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியகதீதத் துரைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
ராஜாரால்கட்டிய கோவிலடி
கட்டியகோவில் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முட்டிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமிங்கேது சொல்லுமையா
முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந்தீன் சத்தமடி
தீனதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்று அன்னச்
சத்திரம்கட்டின தார்காணும்

கட்டியமாமடம் செட்டியடிதர்ம
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை இட்டமைத்தார்புக
ழுயர்ந்ததர்மம் மடம்சமைத்தார்
உயர்ந்ததர்மம் மிகுந்தோர்கள்செல்வ
மோங்கும் வசியகுலத்தார்கள்
இசைந்துவந்தவரைத் தேடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி
நாட்டியதர்மம் மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேஇவ
ராண்டுக்கொருதரம் வாரதுண்டு
வாரதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதி ரேசனுக்குஇது
ஆடித்திருவிழா முக்கியமோ
முக்கியமாய்க்கதிர் காமத்திலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி
கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்திதம்
நடத்துகின்ற வளமையென்ன
வளமைவேழத்தின் மேல்மிருந்துகந்தன்
மாணிக்கப்பேழை தனிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி
கந்தனுக்கொத்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வருநாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா
தேருமேலேறும் வளமையில்லைசித்திர
தேருமிறப்பது மிங்கேயில்லை

நேருடன் தண்டிகை மீதேறிசுவாமி
நீராறுப்பானதைப் பாருங்கடி
நீராறுபவென்றதும் தோன்றலையோ இப்போ
நீர்சொன்னபாஷை விளங்கலையே
நேரும்மின்னாட்டு வளமைகளோ இதைச்
சீருடனேசொல்ல வேணுமையா
சீருள்ளமாணிக்கக் கெங்கையிலேசுவாமி
தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேஇதை
நீராறுப்பென்பதும் மெய்தாண்டி
மெய்யானஆறுமுகவரெனும்சுவாமி
மேவியவள்ளி தெய்வானையெனும்
தையலர்மேவும் கதிர்காமந்தனை
தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ
முத்தியுண்டங்கு நினைத்தாலுந்தவ
முத்தர்புகழ்கதிர் காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பிணி
சேராதருள்வார் முருகேசன்
கேசவன்தன்னருமைக் குறியவள்ளிக்
கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிகுந்த தமிழ்களைச்சொன்ன
மன்னவரேயுமக் கெந்தவூரு
மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
மாநகராம்திருப் புல்லாணி
நன்னயமாகியஊர்தாண்டி தங்கம்
ராமசாமியெந்தன் பேர்தாண்டி
பேரையுமூரையுமேபுகழ்ந்து சொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்த
தாருலவுங்கதிர் காமத்துக்கேநீரும்
தானிங்கேவந்த வயணமென்ன
வந்துகொழும்பதனிற் சிறந்துவெகு
வாசமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி

கைதொழுதேத்தியே மெய்வாசன் நம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனின்மேலினி
செந்தமிழால்துதி சொலலுமையா
சொல்லச்செவியுற்றுக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்றுமிப் பாட்டவர்க்கும்
இல்லையெல்லாவல்லத் தாண்டவத்தால்வாலை
தேவிசிவகாமியின் தவத்தால்
அருள்பொருந்திய பூவாசன்வள்ளி
யம்மைதெய்வானை கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம்
தீராநோய்களை தீர்த்தவண்டிசுவாமி
சித்தம்வைத்து நம்மைக் காத்தவண்டி
நாரணனுக்கு மருகனவன்ழெகு
நாதன்செந்தூரு முருகனையன்
தேவசேனாதி பதிதாண்டிகூவும்
சித்திரசேவல் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சந்நதியில்நின்று
முழங்கக்கும்மி யடியுங்கடி
சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர் காமமுகந்தவரை
இம்மானிலத்தவரேற்றியேஅவ
ரெண்ணிருந்தபடி போற்றியே
செலுத்தும்வேடிக்கைபாருங்கடிகந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் பெத்தவண்டிகந்த
சாமிக்கிசிங்காரம் நித்தமடி
முப்பத்துமுக்கோடி தேவருக்கும்நல்ல
மூவருக்கும்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்திரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும்
சிங்காரக்கும்மி தமிழ்சிறக்கும்நம்மள்
செங்கைவேலன் கதிரேசனுக்கும்

மக்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி
சித்திரவேலா யுதம்வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னிதியில்புகழ்
சாமியிடும்பனும் வாழியதாம்.

மங்களம்.

ஆதிபரஞ்சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வானைக்கும் வேலர்க்கும்
சுபமங்களம்
திருவுக்கும் திருமாலுக்கும் தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்
மாலருள்பிர்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர் காமம்வாழ் முருகையர்க்கும்
சுபமங்களம்
செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனாறு முகன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்

கதிர்காமக் கும்மி
முற்றிற்று.

இதில் கதிரேசன்பேரில் ஆனந்தக்களிப்பு கதிர்காமத்து ஏசல் கதிர்காமக்கும்மி மங்களம் இவைகள் அடங்கியிருக்கின்றன.

Checked

~~Gentz~~

1878 9